# தூத்துக்குடியில் ரூ.16 ஆயிரம் கோடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலை: பிப். 25-ல் முதல்வர் அடிக்கல் நாட்டுகிறார்


மின்சார கார் தயாரிப்பு தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டு விழா தொடர்பாக தூத்துக்குடியில் நேற்று ஆய்வு மேற்கொண்ட சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில் ராஜ். படம்: என்.ராஜேஷ்

**தூத்துக்குடி:** தூத்துக்குடியில் ரூ.16 ஆயிரம் கோடியில் அமைக்கப்படும் மின்சாரகார் தொழிற்சாலைக்கு முதல்வர்ஸ்டாலின் வரும் 25-ம் தேதி அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னையில் கடந்த மாதம்உலக முதலீட்டாளர்கள் மாநாடுநடைபெற்றது. இதில், தூத்துக்குடி மாவட்டத்தில் இரு நிறுவனங்கள், ரூ.26 ஆயிரம் கோடிமுதலீடு செய்ய தமிழக அரசுடன்புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டன.

உலகின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான, வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்பாஸ்ட் என்ற நிறுவனம், தூத்துக்குடியில் ரூ.16 ஆயிரம் கோடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது.

நிறுவனம் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. இதற்காக, தூத்துக்குடி சில்லாநத்தம் சிப்காட் பகுதியில் 408 ஏக்கர் நிலம் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. நிறுவனத்துக்கான அடிக்கல் நாட்டு விழா வரும் 25-ம் தேதி நடைபெற உள்ளது.

அன்று காலை தூத்துக்குடி வரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கிவைக்கிறார். தொடர்ந்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலும் பங்கேற்கிறார்.

இந்நிலையில், சிப்காட் இயக்குநர் செந்தில் ராஜ், தொழில் வழிகாட்டும் அமைப்பு தலைமைநிர்வாக அதிகாரி விஷ்ணு ஆகியோர் தூத்துக்குடியில் மின்சார கார் தொழிற்சாலை அமையவுள்ள இடத்தை நேற்று ஆய்வு செய்தனர்

## வானியல் ஆய்வுக்கான `எக்ஸ்போசாட்' செயற்கைக்கோள் நியூட்ரான் நட்சத்திரம் தொடர்பான தரவுகள் சேகரிப்பு



சென்னை: எக்ஸ்போசாட் செயற்கைக்கோள் மூலம் கிராப் பல்சர் எனும், நியூட்ரான் நட்சத்திரத்தில் இருந்து வெளியாகும் எக்ஸ் கதிர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

வானியல் நிகழ்வுகளை ஆய்வு செய்வதற்காக எக்ஸ்போசாட் என்ற செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது.

இது பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட் மூலம் கடந்த ஜன. 1-ம் தேதி பூமியில் இருந்து 650 கி.மீ. உயரம் கொண்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. இதன்மூலம் கருந்துளை, நியூட்ரான் நட்சத்திரங்களில் இருந்து வெளிவரும் கதிரியக்கம்,

விண்மீன் வெடிப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து 5 ஆண்டுகள் ஆய்வு செய்யப்பட உள்ளன.

இந்நிலையில், எக்ஸ்போசாட் செயற்கைக்கோள் மூலம் நியூட்ரான் விண்மீன்களில் இருந்து வெளியாகும் எக்ஸ் கதிர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மொத்தம் 469 கிலோ எடை கொண்ட எக்ஸ்போசாட் செயற்கைக்கோளில், எக்ஸ்பெக்ட் (எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோகிராபி), போலிக்ஸ் (எக்ஸ்ரே போலரி மீட்டர்) ஆகிய இரு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றை பெங்களூருவில் உள்ள ராமன் ஆராய்ச்சி நிறுவனமும், யுஆர்ராவ் செயற்கைக்கோள் மையமும் உருவாக்கியுள்ளன.

**எக்ஸ் கதிர்களின் செயல்பாடு:** எக்ஸ்பெக்ட் சாதனம் எக்ஸ்கதிர்களின் நீண்டகால செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள ஏதுவாக, அவற்றின் மூலங்களின் நிறமாலை மற்றும் துருவப்படுத்தல் செயல்பாடுகளைக் கண்காணிக்கும்.

அதன்படி, காசியோபியா ஏ எனும் விண்மீன் வெடிப்பில் (சூப்பர் நோவா) இருந்து வெளிப்படும் ஒளியை எக்ஸ்பெக்ட் கருவி கடந்த ஜனவரி முதல் வாரத்தில் படம் பிடித்தது. அதேபோல, போலிக்ஸ் கருவி விண்வெளியில் உள்ள கருந்துளை, நியூட்ரான் விண்மீன்களில் இருந்து வெளியேறும் எக்ஸ் கதிர்களின் துருவ முனைப்பு அளவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களின் நிலை குறித்து ஆராயும்.

போலிக்ஸ் கருவி கடந்த ஜனவரி 15 முதல் 18-ம் தேதிவரையான காலத்தில் விண்வெளியில் உள்ள கிராப் பல்சர் (crab pulsar) எனும் இளம் வயது நியூட்ரான் நட்சத்திரத்தில் இருந்துவெளியேறும் எக்ஸ் கதிர்களின் தரவுகளை சேகரித்து வழங்கிஉள்ளது. அதற்கான தரவுகளின் வரைபடமும் வெளியிடப்பட்டுஉள்ளது

## உரிமையியல் நீதிபதி பணிக்கான தேர்வில் பழங்குடியின இளம்பெண் தேர்ச்சி: முதல்வர் மு.க.ஸ்டாலின், தலைவர்கள் வாழ்த்து




**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் வசிக்கும் பழங்குடியின சமூகத்தை சேர்ந்த இளம்பெண் ஸ்ரீபதி, உரிமையியல் நீதிபதி பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் மலைவாழ் மக்கள் வசிக்கும் புலியூர் என்ற குக்கிராமத்தில் வசிப்பவர் ஸ்ரீபதி (23). தமிழ்வழி கல்வியில் படித்த இவர், பின்னர் வழக்கறிஞர் பட்டம் பெற்றார். படிக்கும்போதே இவருக்கு திருமணம் நடைபெற்றது. இவரது கணவர் வெங்கட்ராமன். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடந்த ஆண்டு நடத்திய உரிமையியல் நீதிபதி பணிக்கான தேர்வில் ஸ்ரீபதி பங்கேற்றார். தேர்வு தேதிக்கு 2 நாட்களுக்கு முன்புதான் அவருக்கு குழந்தை பிறந்தது. இதனால், மிகுந்த சிரமத்துடன் தேர்வில் பங்கேற்றார். இந்த நிலையில், தேர்வு முடிவு சமீபத்தில் வெளியானது. இதில், ஸ்ரீபதி தேர்ச்சி பெற்றுள்ளார்.

அவருக்கு முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**முதல்வர் ஸ்டாலின்** எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ஜவ்வாது மலையை அடுத்த புலியூர் கிராமத்தை சேர்ந்த ஸ்ரீபதி 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். பெரிய

வசதிகள் இல்லாத மலைக் கிராமத்தை சேர்ந்த பழங்குடியின பெண் ஒருவர், இளம் வயதில் உயர்ந்த நிலையை எட்டியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை என திமுக கொண்டுவந்த அரசாணையின் வழியே ஸ்ரீபதி நீதிபதியாக தேர்வானதை அறிந்து பெருமை கொள்கிறேன். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற அவரது தாய்க்கும், கணவருக்கும் எனது பாராட்டுகள். சமூகநீதி என்ற சொல்லை உச்சரிக்கக்கூட மனமில்லாமல் தமிழகத்தில் வலம்வரும் சிலருக்கு, ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் சிறந்த பதில். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

**அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்**, மமக தலைவர் ஜவாஹிருல்லா உள்ளிட்டோரும் ஸ்ரீபதிக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். 6 மாத பயிற்சிக்கு பிறகு அவர் நீதிபதியாக பதவி ஏற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சோலார் பேனல் பொருத்தினால் 300 யூனிட் வரை இலவச மின்சாரம்: ரூ.75,000 கோடியில் ‘சூரிய வீடு’ திட்டம்



கோப்புப்படம்

**புதுடெல்லி:** சூரிய மின்சக்தியை ஊக்குவிக்கும் வகையில் ‘பிரதமரின் சூரிய வீடு: இலவச மின்சார திட்டம்’ ரூ.75,000 கோடிக்கும் மேற்பட்ட முதலீட்டில் தொடங்கப்படுவதாக பிரதமர் மோடி அறிவித்தார். இதன்மூலம் வீட்டின் கூரையில் சோலார் பேனல்களை பொருத்திக் கொள்ளும் வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படும்.

நாட்டில் சூரிய மின்சக்தி பயன்பாட்டை அதிகரிக்கும் முயற்சியாக, வீடுகளின் மேற்கூரையில் சோலார் பேனல்கள் (சூரிய மின்சக்தி தகடுகள்) பொருத்துவதற்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அரசு மானியங்கள் கிடைப்பதன் மூலம், அதிகமான குடும்பங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் இப்போது மேற்கூரையில் சோலார் பேனல்களை பொருத்தி வருகின்றன.

இந்நிலையில், இத்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக ‘பிரதமரின் சூரியவீடு: இலவச மின்சாரம்’ என்ற திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி நேற்று கூறியிருப்பதாவது:

நிலையான வளர்ச்சி மற்றும் மக்கள் நலனை ஊக்குவிப்பதற்காக, பிரதமரின் சூரிய வீடு: இலவச மின்சார திட்டம் தொடங்கப்படுகிறது. ஒரு கோடி வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் வகையில் ரூ.75,000 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டில் இத்திட்டம் தொடங்கப்படுகிறது.

இத்திட்டத்துக்கு அதிக சலுகையுடன் வங்கி கடன் கிடைக்கும். நிலையான மானியம் மக்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். வீட்டின் கூரையில் சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்தும் திட்டத்துக்காக மக்களுக்கு செலவு ஏற்படாது என்பதை அரசு உறுதி செய்யும். இத்திட்டத்தில் தொடர்புடைய அனைவரும் தேசிய ஆன்லைன் இணையதளத்தில் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

வீட்டின் கூரையில் சூரிய மின்சக்தி தகடு பொருத்தும் இத்திட்டத்தை அடிமட்ட அளவில் பிரபலப்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்துகள் ஊக்குவிக்கப்படும். இந்த திட்டம் அதிக வருவாயை ஈட்டித் தரும், மின்சார

செலவை குறைக்கும், மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும். சூரிய மின்சக்தியையும், நிலையான வளர்ச்சியையும் நாம் ஊக்குவிப்போம்.

இத்திட்டத்தில் சேர வீட்டு உரிமையாளர்கள் https://pmsuryaghar.gov.inஎன்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

**மானிய விவரம்:** குடியிருப்பு வீடுகளுக்கு 1 கிலோவாட் முதல் 2 கிலோவாட் வரை திறன் உள்ள சோலார் பேனல்கள் பொருத்த ரூ.30,000 மானியம் வழங்கப்படும். கூடுதல் திறன் கொண்ட சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்துவோருக்கு, கிலோ வாட் ஒன்றுக்கு ரூ.18,000 வீதம், 3 கிலோவாட் வரை மொத்தம் ரூ.78,000 மானியம் வழங்கப்படும். 3 கிலோ வாட் திறனுக்கு அதிகமான அளவில் சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்துவோருக்கு உச்சவரம்பாக ரூ.78,000 மானியம் வழங்கப்படும்.

மாத மின் நுகர்வு சராசரியாக 150யூனிட் வரை இருந்தால், 1 முதல் 2 கிலோவாட் திறனுள்ள சூரிய சோலார் பேனல்கள் பொருத்தி ரூ.30,000 முதல் ரூ.60,000 வரை மானிய உதவி பெறலாம். மின் நுகர்வு மாதத்துக்கு சராசரியாக 150 யூனிட் முதல் 300 யூனிட் வரைஇருந்தால் 2 கிலோவாட் முதல் 3 கிலோவாட் திறனுள்ள சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்தி ரூ.60,000 முதல் ரூ.78,000 வரை மானியம் பெறலாம். மாத சராசரி மின் நுகர்வு 300 யூனிட்டுக்குமேல் உள்ளவர்கள் 3 கிலோவாட் திறனுக்கு அதிக அளவிலான சோலார் பேனல்களை பொருத்தினாலும் மானிய உச்ச வரம்பு ரூ.78,000 தான்.

## டிராக்டர்களுடன் நுழைந்து டெல்லியை முற்றுகையிட முயற்சி: விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டு வீச்சு

EVA


டெல்லியை நோக்கி செல்வதற்காக பாட்டியாலா அருகே பஞ்சாப் - ஹரியாணா ஷம்பு எல்லையில் நேற்று ஒன்றுதிரண்ட விவசாயிகள் மீது போலீஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கூட்டத்தை கலைத்தனர்.

**புதுடெல்லி:** டெல்லியில் போராட்டம் நடத்த முயன்ற விவசாயிகள் மீது போலீஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி விரட்டினர்.

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லியில் பிப்ரவரி 13-ம்தேதி (நேற்று) முதல் போராட்டம் நடத்த உள்ளதாக பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள் அறிவித்திருந்தனர். இந்த நிலையில், 2 மத்திய அமைச்சர்கள் தலைமையில் விவசாயிகளுடன் கடந்த 12-ம் தேதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில், உடன்பாடு ஏற்படாத நிலையில், உத்தர பிரதேசம், ஹரியாணா,பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்துஆயிரக்கணக்கான விவசாயிகள் டிராக்டருடன் டெல்லியை நோக்கி புறப்பட்டனர்.

6 மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், டீசல் உள்ளிட்டவற்றுடன் அவர்கள் டெல்லி நோக்கி சென்றனர். விவசாயிகள் டெல்லிக்குள் நுழைவதை தடுக்கும் விதமாக, எல்லை பகுதிகளில் சீல் வைத்து பல்வேறு தடைகளை போலீஸார் ஏற்படுத்தியிருந்தனர்.

தடைகளை தகர்த்து டெல்லிக்குள் நுழைய முயன்ற விவசாயிகள் மீது போலீஸார் நேற்று ட்ரோன் மூலம் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும்,

தண்ணீரை பீய்ச்சியடித்தும் விரட்டினர். பலர் கைது செய்யப்பட்டனர். இதுகுறித்து டெல்லி காவல் துறை அதிகாரி ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியதாவது:

பஞ்சாப் - ஹரியாணா உட்பட அனைத்து எல்லை பகுதிகளிலும் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்படும் விவசாயிகளை தங்கவைக்க, பெரிய பகுதியை ஒதுக்குமாறு கேட்டுள்ளோம். பஞ்சாப், ஹரியாணா எல்லை பகுதிகளில் கான்கிரீட் தடுப்புகள், ஆணிகள், முள்வேலிகளை கொண்டு சாலைகளில் அரண் அமைத்துள்ளோம். டெல்லி நகரை சுற்றிலும் கூட்டம் கூடுவதை தடுக்க 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பஞ்சாப் கிசான் மஸ்தூர் சங்கர்ஷ் விவசாய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சர்வன் சிங் பாந்தர் கூறியதாவது: பஞ்சாப், ஹரியாணாவை ஒட்டிய எல்லை பகுதிகள், முள்வேலிகளால் அடைக்கப்பட்டிருப்பது, சர்வதேச எல்லையை நினைவுபடுத்துகிறது. ஹரியாணா மாநில விவசாயிகளை துன்புறுத்தும் நடவடிக்கையில் மனோகர் லால் கட்டார் அரசு ஈடுபட்டுள்ளது.

விவசாயிகள் கடந்த 2020-ம் ஆண்டு நடத்திய போராட்டம் 13 மாதங்களுக்கு மேல் நீடித்தது. வெயில், மழையை பொருட்படுத்தாமல் கோரிக்கைகளை வலியுறுத்தி எல்லையில் தங்கி போராட்டத்தை தொடர்ந்தோம். தற்போதும் அதுபோன்ற போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். 6 மாதங்களுக்கு தேவையான பொருட்களுடன்தான் வந்துள்ளோம். கடந்த முறை நடந்த போராட்டத்தின்போது மத்திய அரசுகொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை. ஆனால், இந்த முறை எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறிய பின்னரே போராட்டத்தை கைவிடுவோம்.

பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உத்தரவாத சட்டம் இயற்றுதல், விவசாயிகளின் கடன் தள்ளுபடி, எம்.எஸ்.சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துதல், விவசாயிகள், வேளாண் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், லக்கிம்பூர் கெரி வன்முறையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நீதி மற்றும் இழப்பீடு, நிலம் கையகப்படுத்துதல் 2013 சட்டத்தை மீண்டும் அமலாக்குதல் உள்ளிட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கான முக்கிய

கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். அதைவிடுத்து, அடக்குமுறைகள் போராட்டத்தை ஒடுக்கிவிட முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில், விவசாயிகளின் போராட்டத்துக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. 'வரும் மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைக்கும்போது, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆணைய பரிந்துரைப்படி பயிர்களுக்கு ஒவ்வொரு விவசாயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்கப்படும்' என்று ராகுல் காந்திஎக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## துப்பாக்கி சுடுதலில் இஷா, மதீனனுக்கு தங்கப் பதக்கம்



**கிரனடா:** ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஸ்பெயினில் உள்ள கிரனடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 10 மீட்டர்ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் இஷா அனில் தக்சலே இறுதி சுற்றில் 251.8 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஷாம்பவி ஷிர்சாகர் 227.6 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியா 3 பதக்கங்களையும் முழுமையாக கைப்பற்றியது. உமாமகேஷ் மதீனன் இறுதி சுற்றில் 252.1 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்றார். மற்ற இந்திய வீரர்களான பார்த் மானே 250.6 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், அஜய் மாலிக் 229 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

## அதிபர் முகமது அல் நஹ்யான் உடன் பிரதமர் மோடி சந்திப்பு: இந்தியா, யுஏஇ இடையே 8 ஒப்பந்தம் கையெழுத்து



**அபுதாபி:** ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ள பிரதமர் மோடி அந்நாட்டு அதிபர் முகமது அல் நஹ்யானை நேற்று சந்தித்தார். அப்போது இரு நாடுகள் இடையே 8 ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த 2015-ம் ஆண்டு பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) சென்றார். அப்போது அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் கட்ட 27 ஏக்கர் நிலத்தை அந்த நாட்டுஅரசு வழங்கியது. இதன்பிறகு கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பரில்கோயில் கட்டுமான பணி தொடங்கியது. ரூ.700 கோடியில் கோயில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

இதைத் தொடர்ந்து அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் இன்று திறக்கப்படுகிறது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் பயணமாக நேற்று அபுதாபி சென்றார். அந்த நாட்டு அதிபர் முகமது பின் சையது அல் நஹ்யானை அவர் சந்தித்துப் பேசினார். அப்போது இந்தியா, ஐக்கிய அரபு

அமீரகம் இடையே துறைமுகம், முதலீடு, எரிசக்தி, வர்த்தகம், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை தொடர்பான 8 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. யுஏஇ-யில் யுபிஐ மற்றும் ரூபே அட்டை திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதன் பிறகுஇந்திய வம்சாவளியினர் பங்கேற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இரண்டாம் நாளான இன்று சுவாமி நாராயண் கோயில் திறப்பு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். பின்னர் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் நடைபெறும் உலக அரசு உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

டெல்லியில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின்போது இந்தியா-மத்தியகிழக்கு-ஐரோப்பா பொருளாதாரவழித்தடம் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தில் யுஏஇ இடம் பெற்றிருக்கிறது. இதுதொடர்பாக யுஏஇ தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி விரிவான பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இன்று கத்தார் தலைநகர் தோஹாவுக்கு பிரதமர் மோடி செல்கிறார். அந்த நாட்டு தலைவர்ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானியை அவர் சந்தித்துப் பேசுகிறார். இந்திய கடற்படையை சேர்ந்த 8 முன்னாள் அதிகாரிகளுக்கு கத்தார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. அவர்கள் 8 பேரும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த சூழலில் பிரதமர் மோடியின் கத்தார் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஐக்கிய அரபு அமீரகம், கத்தார்பயணம் தொடர்பாக பிரதமர் மோடிநேற்று வெளியிட்ட அறிக்கை: அபுதாபியில் சுவாமி நாராயண் கோயிலை திறந்து வைக்க உள்ளேன். நல்லிணக்கம், அமைதி, சகிப்புத்தன்மைக்கு இந்த கோயில்உதாரணமாக திகழும். கத்தார் நாட்டின் தலைவர் தமீம் பின் ஹமாத் அல்-தானி தலைமையில் அந்த நாடு மிகப்பெரிய மாற்றத்தை கண்டு வருகிறது. இந்தியாவும் கத்தாரும் வரலாற்று ரீதியாகநெருக்கமான நாடுகள். இரு நாடுகள் இடையே வர்த்தகம், முதலீடு, எரிசக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு அதிகரித்து வருகிறது. கத்தார் தலைநகர் தோஹாவில் 8 லட்சம் இந்தியர்கள்

வசிக்கின்றனர். அவர்கள் இருநாடுகளுக்கும் இடையே உறவு பாலமாக விளங்குகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்

EVA STALIN IAS ACADEMY